# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2017ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பெருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | . <br> 1) தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் 3வது மைல் புதுக்குடியில் அமைந்துள்ள ஆயுதப்படை காவலர்களுக்கான குடியிருப்பின் முன்புறம் மற்றும் பின்புறம் மாநகராட்சி சாலையினை ஒட்டி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சாலையோர பூங்கா அமைத்து பராமரித்திட அனுமதி வழங்க ஆயுதப்படை காவல் ஆய்வாளர் கோரியுள்ளார். <br><br> அதன்படி தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் 3வது மைல் புதுக்குடியில் அமைந்துள்ள ஆயுதப்படை காவலர்களுக்கான குடியிருப்பின் முன்புறம் காமராஜர் நகர், சாலை வார்டு சி.பிளாக் 44 நகரளவு எண் 1 பாகம். நீளம் 224.00மீ. அகலம் வடபக்கம் மற்றும் தென்பக்கம் 0.00மீ நடுவில் 5.00 மீ மொத்த பரப்பளவு 560.00 ச.மீ. பின்புறம் சங்கர் காலனி சாலை, வார்டு சி. பிளாக் 43 நகரளவு எண். 89 பாகம், நீளம் 210.10மீ. X அகலம் 7.00 மொத்த பரப்பளவு 1471.00 ச.மீ. உள்ள இடத்தில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படாதவாறு சாலையோர பூங்கா அமைத்து பராமரித்திட காவல்துறைக்கு ஒப்படைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> **அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். <br> ந.க.எண்.0688/2017/மே.ம.எப்1 | 39) <br> அனுமதிக்கப்பட்டது |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் ஜனவரி 1 முதல் நாளது தேதி வரை 1475 டெங்கு நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளது. மேற்படி டெங்கு காய்ச்சல் மாநகராட்சி பகுதிகளில் தீவிரமாக பரவி வருவதால் அதனை போர்கால அடிப்படையில் தடுக்கும் பொருட்டு இம்மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள பிற உள்ளாட்சி அமைப்புகளில் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்தும், பணிபுரிந்து வரும் நகர்நல அலுவலர்கள், முதுநிலை பூச்சியியல் வல்லுநர்கள், இளநிலை பூச்சியியல் வல்லுநர்கள், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மேற்படி தீவிர டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர், மேற்படி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அத்தியாவசிய தேவையான | 40) <br><br> அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | உணவு வசதிக்காக, ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூபாய் 200 வீதம், தங்கும் வசதி மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளும் பொருட்டு 16.02.2017 முதல் டெங்கு நிகழ்வுகள் குறையும் வரை பொது நிதியிலிருந்து சுமார் ஏறத்தாழ ரூ. 13,00,000 (ரூபாய் பதிமூன்று இலட்சம் மட்டும்) செலவு செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு –<br><br>டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதை போர்கால அடிப்படையில் தடுக்கும் பொருட்டு Sec 15 ல் தமிழ்நாடு பொது சுகாதாரம் சட்டம் 1939ன் படி தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண் எச்1/1191/17 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் ஜனவரி 1 முதல் நாளது தேதி வரை 1475 டெங்கு நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளது. மேற்படி டெங்கு காய்ச்சல் மாநகராட்சி பகுதிகளில் தீவிரமாக பரவி வருவதால் அதனை போர்கால அடிப்படையில் தடுக்கும் பொருட்டு இம்மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள பிற உள்ளாட்சி அமைப்புகளில் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்தும், பணிபுரிந்து வரும் நகர்நல அலுவலர்கள், முதுநிலை பூச்சியியல் வல்லுநர்கள், இளநிலை பூச்சியியல் வல்லுநர்கள், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் மேற்படி தீவிர டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர், மேற்படி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அத்தியாவசிய தேவையான வாகன வசதிக்கு,25 வாகனங்கள் வாடகைக்கு 16.02.2017 முதல் டெங்கு நிகழ்வுகள் குறையும் வரை பயன்படுத்தும் பொருட்டு, தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து சுமார் ஏறத்தாழ ரூ. 11,00,000 (ரூபாய் பதினொன்று இலட்சம் மட்டும்) செலவு செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு –<br><br>டெங்கு காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதை போர்கால அடிப்படையில் தடுக்கும் பொருட்டு Sec 15 ல் தமிழ்நாடு பொது சுகாதாரம் சட்டம் 1939ன் படி தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண் எச்1/1191/17 | 41)<br>அனுமதிக்கப்பட்டது |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23 டேவிஸ்புரம் பகுதியில் அமைந்துள்ள கதவு எண். 72 வரி விதிப்பு எண் 171158 என்னும் கட்டிடம் (திருமண மண்டபம்) தூத்துக்குடி மாநகராட்சியானது நகராட்சியாக செயல்பட்ட காலத்தில் 1993–1994 இரண்டாம் அரையாண்டு காலத்தில் சொத்து வரி சீராய்வின் போது உயர்வு செய்யப்பட்ட தொகையினை ஆட்சேபித்து மேற்படி கட்டிடத்தின் வரி விதிப்பாளரான திருமதி. பி.லீலா என்பவரால் தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.703/1996 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டது. | 42) 1 மற்றும் 2<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி வழக்கின் தீர்ப்பில் மேற்படி வரிவிதிப்பிற்கு உயர்வு செய்யப்பட்ட சொத்து வரி தொகையானது மேற்படி வரி விதிப்பாளரிடம் இருந்து நகராட்சி வசூலிக்க கூடாது என நிரந்தர உறுத்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பினை ஆட்சேபித்து அப்போதைய நகராட்சி சார்பில் வழக்கு ஏதும் தொடராத நிலையில் மேற்படி வழக்கானது முடிவுற்று சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக காலம் கடந்துவிட்டதால் சட்ட ரீதியாக மேல் முறையீடு செய்வதற்கான வழிவகை ஏதும் இல்லாத சூழ்நிலையில், மேற்படி வழக்கின் 20.10.1997 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ஆதாரமாக கொண்டு 1993–1994 முதல் அரையாண்டு காலத்தில் மேற்படி வரிவிதிப்பின் சொத்து வரியான ரூ 3802/–ஐ அடிப்படையாக கொண்டு அடுத்து வரும் பொது சீராய்வு காலமான 1998–1999 இரண்டாம் அரையாண்டு மற்றும் 2008–2009 இரண்டாம் அரையாண்டு ஆகியவற்றிற்கு சொத்து வரி மறு நிர்ணயம் செய்து கணினியில் பதிவு செய்யலாம்.<br><br>மேலும் மேற்படி வரிவிதிப்பிற்கான சொத்து வரி தொகையாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தொகைக்கும் தற்போது மேற்படி வழக்கின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ள சொத்து வரி தொகைக்கும் உள்ள வித்தியாசத்தினை சரி செய்யும் வகையில் கணினியில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு ஒழுங்குபடுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1) 1993–1994 முதலாம் அரையாண்டு சொத்து வரி தொகையினை அடிப்படையாக கொண்டு அடுத்து வரும் 1998–1999 மற்றும் 2008–2009 ஆண்டுகளுக்கான பொது சீராய்வில் சொத்து வரி மறு நிர்ணயம் செய்து கணினியில் பதிவு செய்யலாம்.<br><br>2) கணினியில் பதிவாகி உள்ள சொத்து வரி தொகைக்கும், தற்போது நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும் தொகைக்கும் உள்ள வித்தியாசத்தினை நீக்கம் செய்து கணினியில் உரிய திருத்தங்கள் செய்யலாம்.<br><br>அ4/19796/1996 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல்– துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துப்புரவு பணி மேற்கொள்ளும் பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள துப்புரவு பணிகளுக்கு தேவையான துடைப்பான், மண்வெட்டி, வாளி, மிலார், கடப்பாறை, கான் அகப்பை மற்றும் தேவையான தளவாடச்சாமான்கள் 10.09.2012ம் தேதிக்கு பின்பு கொள்முதல் செய்து வழங்கப்படாத நிலையில் பெரும்பாலான தளவாடச்சாமான்கள் பழுதடைந்து சரிவர பயன்படுத்த இயலாமலும், போதிய எண்ணிக்கைகள் இல்லாததாலும் துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள சிரமம் நிலவுகிறது. எனவே துப்புரவு பணியாளர்களின் பணித்திறன் திறம்பட அமையவும், பொது சுகாதாரம் பேணிக்காக்கவும் அவசர அவசியம் கருதி குறுகிய கால | 43)<br>அனுமதிக்கப்பட்டது |

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தளவாடச்சாமான்கள் கொள்முதல் செய்யவும் மேற்படி வகைக்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 4.50 இலட்சம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/1491/27

6)தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான பாளை ரோடு பகுதியில் (மாநகராட்சி புதிய அலுவலகம் அருகில்) புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் ஒரு கடையை மாத வாடகை அடிப்படையில் மாநகராட்சியின் விதிகளுக்குட்பட்டு வழங்கக் கோரப்பட்டதின் பேரில், தூத்துக்குடி மாநகராட்சி மூலம் கட்டப்பட்ட பாளை ரோடு பகுதியில் (கடை எண்கள் 22,23 மற்றும் 24) கடைகளை, பொது மேலாளர், தி.மா.கூ.பா.உ.ஒன்றியம் திருநெல்வேலி விற்பனை பிரிவு லிமிடெட், மேலாண்மை இயக்குநர், தூ.வே.உ.கூ.விற்பனை சங்கம் லிமிடெட் மற்றும் முதன்மை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றிற்கு தலா ஒரு கடை வீதம் ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

44) அனுமதிக்கப்பட்டது

| வ.எண் (1) | கடை எண் (2) | கடையின் அளவு (ச.அ.) (3) | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் (4) | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை (5) |
|---|---|---|---|---|
| 1 | 22 | 70 (ச.அ.) | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (ATM) | ரூ. 3653/– |
| 2 | 23 | 80 (ச.அ.) | தி.மா.கூ.பால்.உ. ஒன்றியம் (ஆவின் பால்) | ரூ. 4175/– |
| 3 | 24 | 320 (ச.அ.) | தூ.வே.உ.கூ. விற்பனை சங்கம் (அம்மா மருந்தகம்) | ரூ. 16698/– |

மேலும், மேற்படி கட்டிடங்களுக்கு தற்போதைய சந்தை மதிப்பு மற்றும் பொதுப்பணித்துறை அட்டவணை ஆகியவற்றை கணக்கில் கொண்டு மாத வாடகையாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, 01.06.2017 முதல் மேற்படி அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட படி வாடகை நிர்ணயம் செய்து, மேற்படி நிறுவனங்களுக்கு மாத வாடகைக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/00937/2017

7) தூத்துக்குடி மாநகராட்சியானது அக்டோபர் 2011இல் விரிவாக்கம் செய்யப்பட்டு அதில் சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய 5 ஊராட்சிப்பகுதிகள் இணைத்து மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

45) 1 மற்றும்3 அனுமதிக்கப்பட்டது

தூத்துக்குடி மாநகராட்சியின் மக்கள் தொகை 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 372408 ஆகும் தற்போதைய 2017 ஆம் ஆண்டு மக்கள் தொகை 400000 இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தினசரி வெளியூரிலிருந்து வேலைநிமித்தமாக மற்றும் தூத்துக்குடி அருகிலிருக்கும்

| | | |
|---|---|---|
| | சுற்றுலா தலங்களுக்கு பயண நிமித்தமாக வந்த செல்லும் மக்கள்தொகை சுமார் 10000 ஆகும்.<br><br>மாநகரப்பகுதியில் தினசரி சென்னை, பெங்களூரு மற்றும் கோவை போன்ற தொலைதூர வடதிசை நகரங்களுக்கு செல்லும் ஆம்னி பேருந்துகள் எண்ணிக்கை சுமார் 35 இயங்கி வருகின்றன. மேற்படி ஆம்னி பேருந்துகளுக்கு என தனியாக பேருந்து நிறுத்தம் மாநகராட்சிப்பகுதியில் இல்லாததாலும் மாநகரின் பல்வேறு பகுதிகளில் தினசரி மாலை 6 மணிக்கு மேல் ஆங்காங்கே நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி செல்வதாலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் மற்றும் பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படுவதுடன் இடநெருக்கடி ஏற்படுகிறது.<br><br>இதனை தவிர்க்கும் பொருட்டு வெளியூர் மற்றும் உள்ளூர் பயணிகள் சென்னை, பெங்களூரு மற்றும் கோவை போன்ற தொலைதூர வடதிசை நகரங்களுக்கு செல்ல ஏதுவாக ஆம்னி பேருந்துகள் அனைத்தும் ஒரே இடத்தில் இருந்து இயக்கி செயல்படுத்துவதற்கு ஏதுவாக புதிய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள உழவர் சந்தை கட்டிடத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள நகரளவு எண்.4151/1 பகுதியில், 7800 சதுரமீட்டர் பரப்பளவு இடத்தில், ஆம்னி பேருந்துகளின் புக்கிங் ஏஜென்ட்களுக்கான அலுவலகம், பேருந்து ஓட்டுநர்களுக்கான குளியலறையுடன் கூடிய கழிப்பறை அமைத்தல், மற்றும் பொது மக்கள் இருக்கை வசதிகள் மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேற்கண்ட ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்து அரசின் மான்யத்துடன் செயல்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அ.கு: 1)மாநகர பொது மக்களின் இடநெருக்கடி தவிர்க்கும் பொருட்டும், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டும் புதிய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள உழவர் சந்தை கட்டிடத்திற்கு கிழக்கு பகுதியில் ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்து அரசின் மான்யம் பெற்று செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/14044/2011 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்

தூத்துக்குடி மாநகராட்சி